செய்தி வெளியீடு எண்: 393 நாள் : 11.08.2015

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் செயலாக்கம் குறித்து 10.8.2015 அன்று வேளாண்மை இயக்குநரகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு. ராஜேஷ் லக்கானி, வேளாண்மைத் துறை இயக்குநர் முனைவர் மு. ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப்'பயிர்கள் துறை இயக்குநர் திரு.லி.சித்திரசேனன், கூடுதல் வேளாண்மை இயக்குநர் திருமதி சு.செந்தாமரை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள், கூடுதல் தோட்டக்கலை இயக்குநர், தோட்டக்கலை இணை இயக்குநர்கள் , மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை,தோட்டக்கலை இயக்குநரக அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

காவிரி பாசன பகுதிகளில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்வதற்கு மேட்டூர் அணை 9.8.2015 அன்று பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடியினை முழுவீச்சில் மேற்கொள்வதற்கு தேவைப்படும் விதை, உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் தேவையான அளவு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு தங்குதடையின்றி விநியோகம் செய்திட தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி அறிவுரை வழங்கினார்.

மேலும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களான மண்வள அட்டை இயக்கம் , டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் , மாநில திட்டங்களான தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் ஆகிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இத்துடன் மத்திய மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களான தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனைக்கான தேசிய இயக்கம் , எலி ஒழிப்பு முகாம் , வேளாண்மை விரிவாக்கத்திற்கான தேசிய இயக்கம் , விதை மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் , தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள் மற்றும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் ஆகிய

திட்டங்களின் செயலாக்கம் குறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களிடம் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

தோட்டக்கலைத் துறை தொடர்பாக அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் பூங்காக்கள், பசுமை குடில் மற்றும் நிழல் வலை குடில் அமைத்தல் திட்டம் குறித்தும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொய் மலர்களுக்கென தனியாக உருவாக்கப்பட்டு வரும் மகத்துவ மைய செயல்பாடு, திண்டுக்கல் மாவட்டத்தில் ரெட்டியார்சத்திரத்தில் உருவாக்கப்பட்டு வரும் காய்கறி பயிர்களுக்கான மகத்துவ மைய செயல்பாட்டினையும் ஆய்வு செய்து இப்பணிகளை துரிதமாக முடித்து விவசாயிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுரை வழங்கினார்.

சொட்டுநீர் பாசனம் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை பணிகளை விரைந்து முடித்திடவும் , பயிர்காப்பீடு திட்டத்தில் வாழை சாகுபடியாளர்களை பங்கேற்று பயன்பெற செய்யும்படி அறிவுரை வழங்கினார்.

மேலும் திட்டத்திற்கான இடுபொருட்களை உரிய காலத்தில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு திட்ட பயன்கள் விரைவாக சென்றடைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் மற்றும் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு ச் செயலர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**